TO BE PUBLISHED IN THE WEBSITE OF DOE



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

# இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)

# Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Foreign Service -2016 (2017)

(01) பொது வினாத்தாள்
General Paper

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

- ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. எல்லா வினாக்களுக்கும் சமமான புள்ளிகள் வழங்கப்படும்.

1. அரச முயற்சியாளர்களையும் தனியார் துறையையும் நீண்டகால அடிப்படையில் முதலீடு செய்வதற்கு இலங்கை அரசாங்கம் ஊக்குவிக்க முடியுமான நான்கு வழிகளை விபரிக்குக.

2. "தொழிநுட்பவியல் மாற்றங்கள் மாற்றமடையக் கூடியவை. ஆனால் பொருளாதாரச் சட்டங்கள் மாற்றமடைய முடியாதவை". இக்கூற்றின் வலிதாந்தன்மையைக் கலந்துரையாடுக.

3. பொருளாதார அடிப்படையை அபிவிருத்தி செய்கின்ற வகையில் தமது நாட்டில் அதிகமான புத்தாக்கம் (innovation) வெற்றியடைவதற்கு அரசாங்கங்கள் எவ்வாறு புத்தாக்குனர்களுக்கு உதவுவதை உறுதி செய்ய முடியும்?

4. அண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் (E.U.) இலங்கைக்கு G.S.P. வரிச் சலுகையை அனுமதித்தது. எனினும் இதுவரையில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதிகளில் 80% ஆனவை ஐக்கிய இராச்சியத்துக்கே செய்யப்பட்டுள்ளது. தற்போது ஐக்கிய இராச்சியமானது 2019 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறத் தீர்மானித்துள்ளது. இது எவ்வாறு இலங்கையின் ஏற்றுமதிகளில் தாக்கத்தைச் செலுத்தும் என விளக்குக.

5. "ஆசியா மற்றும் பசுபிக் பிராந்திய செழிப்புக்கு காலநிலை மாற்றம் என்பது ஒரு வளர்ந்துவரும் அச்சுறுத்தல் ஆகும்". மேலே தரப்பட்ட நாடுகளில் காரணமாக இருந்த காலநிலை மாற்ற அழிவுகளையும் இப்பிராந்தியத்தில் ஒரு நிலைபேறான அபிவிருத்தியை அடைவதற்கு இவ்வாறான சேதங்களை இழிவுபடுத்துவதற்கேற்ற வகையில் எடுக்கக்கூடிய சார்பான பரிகாரங்களையும் விளக்குக.

6. சமூக நலன்களை உறுதிப்படுத்துவதற்கேற்ப சுற்றுலாத்துறையை எவ்வழிகளில் அபிவிருத்தி செய்யப்படல்வேண்டும்?

7. சீனாவினது "ஒரு வலயம் ஒரு பாதை (One Belt, One Road)" அமுல்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய பொருளாதார மற்றும் அரசியல் தந்திரோபாய விஸ்தரிப்புகள் யாவை?

8. நாளாந்தம் நாடு பூராகவும் சேகரிக்கப்படும் 6 000 மெட்ரிக் தொன் குப்பைகளில், அரைவாசிக்கும் மேலானவை மேல் மாகாணத்தில் இருந்து சேகரிக்கப்படுபவை ஆகும். இவ்வாறான குப்பைகள் மூலமான பெரும் ஆபத்திலிருந்து நீங்குவதற்கு எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் யாவை?

9. "அடுத்து வரும் 5 - 10 வருடங்களில் தகவல் தொழிநுட்பமானது பெரும்பாலான மரபுகள் கைத்தொழில்களை இல்லாமல் செய்வதுடன் வித்தியாசமான கைத்தொழில்களின் செயற்பாடுகளின் வழிகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்". உமது அபிப்பிராயங்களை கூறுக.

10. "பாரிஸ் காலநிலை உடன்படிக்கையில் (Paris climate agreement)" இருந்து ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி விலகியது பற்றி உமது அபிப்பிராயங்களைக் கூறுக.

***

SLExam.com

SLExam.com

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)

Open Competitive Examination for Recruitment to Grade III of the
Sri Lanka Foreign Service -2016 (2017)

**(02) உலக விவகாரங்கள் I (அரசியல்)**
World Affairs I (Political)

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

- **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. எல்லா வினாக்களுக்கும் **சமமாகப்** புள்ளிகள் வழங்கப்படும்.

**1.** சர்வதேச விவகாரங்களோடு தொடர்புபடும் செயற்பாட்டாளர்களுள் அரசுகள் ஏன் பிரதான செயற்பாட்டாளராகக் கருதப்படுகின்றன?

**2.** தற்கால உலக முறைமையில் சர்வதேச நிறுவனங்களின் வகிபங்கினைப் பரிசீலிக்குக.

**3.** பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்றினைப்** பற்றி விமர்சன முறையில் பகுத்தாய்க.

(i) கட்டார் நெருக்கடி

(ii) ஆயுதக் கட்டுப்பாடும் ஆயுதப் பரிகரணமும்

(iii) சர்வதேசப் போதைப் பொருள் கடத்தல்

(iv) மத அடிப்படைவாதம்

(v) இராஜதந்திரிகளின் வகிபாகம்

**4.** சர்வதேசப் பயங்கரவாதத்தின் இயல்பினை விபரித்து உலகின் அரசியல் மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டின் மீதான அதன் தாக்கத்தினைப் பரிசீலிக்குக.

**5.** “வட கொரியாவின் தன்னிச்சையான நடத்தையானது உலக அமைதி மற்றும் பாதுகாப்பின் மீது பலத்த அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.”
இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

**6.** மனித உரிமைகளைப் பாதுகாத்து மேம்படுத்துவதில் சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் வகிபாகத்தை விபரிக்குக.

**7.** சர்வதேச சமாதானத்தைக் கட்டியெழுப்புவதிலும் பேணுவதிலும் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் செயலாளர். நாயகத்தின் வகிபாகத்தை விபரிக்குக.

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டு** தொடர்பாக ஐக்கிய நாடுகள் தாபனத்தின் வகிபாகத்தினைக் குறிப்பிடுக.

(i) பிணக்குகளை நீதியான முறையில் தீர்த்து வைத்தல்

(ii) மில்லேனிய அபிவிருத்தி இலக்கினைச் சாத்தியமாக்குதல்

(iii) வறுமையைக் குறைத்தல்

(iv) காலநிலை மாற்றமும் பூகோளம் உஷ்ணமாகுதலும்

**9.** உமது அபிப்பிராயத்தின் படி பிராந்திய ஒத்துழைப்பினை மேம்படுத்துவதற்கான சார்க் அமைப்பின் முயற்சிகளைப் பலவீனப்படுத்தும் காரணிகள் யாவை?

**10.** தற்போதைய கூட்டரசாங்கம் பதவிக்கு வந்த தினத்திலிருந்து
**ஒன்றில்** இந்தியாவுடன்,
**அல்லது** சீனாவுடன்
இலங்கை கொண்டுள்ள தொடர்பினைப் பரிசீலிக்குக.

***

SLExam.com

SLExam.com

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)**

Open Competitive Examination for Recruitment to Grade III of the Sri Lanka Foreign Service -2016 (2017)

**(03) உலக விவகாரங்கள் II** (பொருளாதாரம்)
World Affairs II (Economic)

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

● **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக. எல்லா வினாக்களுக்கும் **சமமான** புள்ளிகள் வழங்கப்படும்.

---

**1.** இலங்கையின் பொருளாதாரத்தின் மீது பூகோளப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட அண்மைக்கால மாற்றங்கள் எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

**2.** பூகோளப் பொருளாதாரத்துக்கும் இலங்கைப் பொருளாதாரத்துக்கும் இடையே ஒத்துழைப்பை முன்னேற்றுவதற்காக கடந்த இரண்டு வருடங்களில் எடுக்கப்பட்ட படிமுறைகள் யாவை?

**3.** அண்மைய வருடங்களில் இலங்கை முகங் கொடுக்கின்ற வர்த்தகப் பற்றாக்குறைக்கான உள்நாட்டு மற்றும் பூகோளக் காரணங்களை விளக்குக.

**4.** (i) "இடமாற்று பசிபிக் பங்குடைமை (Trans - Pacific Partnership - TPP)" என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

(ii) பசிபிக் பிராந்தியத்தில் இப்பங்குடைமையில் காணப்படும் **பன்னிரெண்டு** நாடுகளையும் குறிப்பிடுக.

**5.** (i) வர்த்தகத் தடைகளைக் குறைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் இருபக்க மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகள் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

(ii) அண்மைய வருடங்களில் இலங்கை பின்பற்றுகின்ற மற்றும் பின்பற்றுவதற்கு பிரேரித்துள்ள இருபக்க மற்றும் பிராந்திய வர்த்தக உடன்படிக்கைகளைக் குறிப்பிடுக.

**6.** (i) (அ) புத்துருவாகும் சந்தைப் பொருளாதாரங்கள் என்றால் என்ன?

(ஆ) உலக வங்கியின் வகைப்படுத்தலின் பிரகாரம் மிகப் பெரிய புத்துருவாகும் சந்தைகள் **ஐந்து** குறிப்பிடுக.

(ii) இலங்கையானது அடைந்துள்ள மில்லேனிய அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொண்டதா என்பதை தெற்காசிய பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுக.

**7.** (i) (அ) "பொருளாதார ஒருங்கிணைவு (Economic Integration)" என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

(ஆ) பொருளாதார ஒருங்கிணைவுக்கு **இரண்டு** உதாரணங்கள் தருக.

(ii) ஐரோப்பிய ஒன்றியத்தில் (EU) காணப்படும் நாடுகளைக் குறிப்பிடுவதுடன் அதன் தோற்றத்தையும் ஒழுங்கமைப்பு கட்டமைப்பையும் விபரிக்குக.

**8.** (i) 'உலக வியாபார ஒழுங்கமைப்பு (WTO)' என்றால் என்ன?

(ii) பின்வரும் தலைப்புக்களின் கீழ் உலக வியாபார ஒழுங்கமைப்பு (WTO) பற்றி சுருக்கக் குறிப்புகள் எழுதுக.

(அ) தொழிற்பாடுகள் (Functions)

(ஆ) கொள்கைகள் (Principles)

(இ) ஒழுங்கமைப்பு கட்டமைப்பு (Organizational Structure)

(ஈ) முக்கியமான விடயங்கள் (Key Subjects)

/பக் 2 ஐப் பார்க்க.

SLExam.com
SLExam.com

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



**9.** (i) (அ) "வியாபாரக் கூட்டணிகள் (Trading Blocs)" என்பதன் மூலம் கருதப்படுவது யாது?

(ஆ) வியாபாரக் கூட்டணிகளின் சிறப்பம்சங்களை விளக்குக.

(ii) பின்வரும் பிரசித்திபெற்ற வியாபாரக் கூட்டணிகளுள் **இரண்டிற்கு** சுருக்கக் குறிப்புக்கள் எழுதுக.

(அ) வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (NAFTA)

(ஆ) லத்தீன் அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (LAFTA)

(இ) தெற்காசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)

(ஈ) இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (ISFTA)

**10.** பின்வருவனவற்றுள் விரும்பிய **நான்கிற்கு** சுருக்கக் குறிப்புக்கள் எழுதுக.

(i) இலங்கைப் பொருளாதாரப் பொதுமன்றம் - 2015

(ii) பூகோள போட்டிசார் சுட்டெண்

(iii) பொருளாதாரம் பூகோளமயமாதல்

(iv) G - 7 குழு

(v) BRICS நாடுகள்

(vi) உலகப் பொருளாதாரப் பொதுமன்றம்

***

SLExam.com

SLExam.com

TO BE PUBLISHED IN
THE WEBSITE OF DOE



සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை - 2016 (2017)

Open Competitive Examination for Recruitment to Grade III of the
Sri Lanka Foreign Service -2016 (2017)

(04) கட்டுரை
Essay

மூன்று மணித்தியாலங்கள்
Three hours

- பின்வரும் தலைப்புக்களுள் மூன்றைத் தெரிந்து பகுப்பாய்வுக் கட்டுரை எழுதுக.

1. மக்களின் நோக்கங்களை நிறைவேற்ற சமூக இணையத்தளங்களைப் பயன்படுத்த வேண்டிய பொருத்தமான முறை

2. இலங்கையில் வீதியோரச் சிறுவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குமான வழிமுறைகள்

3. நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் வேலைநிறுத்தங்களால் ஏற்படும் தாக்கங்கள்

4. சட்டத்தின் இறைமையைப் பாதுகாப்பது நாட்டு மக்களைப் போலவே அரசினதும் கடமையாகும்

5. ஆசிய நாடுகளின் அபிவிருத்தியில் மேலைத்தேய நாடுகளின் மத்தியஸ்த நடவடிக்கைகள்

6. ரூபாவின் பெறுமதி இறக்கத்தினால் இலங்கைப் பொருளாதாரக் கட்டமைப்புக்கு ஏற்படும் தாக்கங்கள்

7. வானிலை மாற்றங்களும் எதிர்கால பூகோள சவால்களும்

8. தேசிய கைப்பணித்துறையின் அபிவிருத்தியும் சீராக்கமும் இலங்கையின் பொருளாதாரத்துக்கு வழங்கும் பங்களிப்பு

9. இலங்கையின் அபிவிருத்திச் செயன்முறையில் பெண்களின் ஊழியம், அறிவு என்பவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதின் அவசியம்

10. உலக சமாதானத்தையும் அமைதியையும் பாதுகாப்பதில் சர்வதேச போதைவஸ்து வியாபாரத்தை ஒழிப்பதன் முக்கியத்துவம்

11. இலங்கையில் மிகப் பிரபலமான 'பெரு விளையாட்டுப் போட்டிகள்' (Big - match) மாணவர்களின் ஒழுக்க முறைமையில் ஏற்படுத்தும் தாக்கங்கள்

12. கழிவுகள் முகாமைத்துவ செயற்பாடுகளில் பொதுமக்களுக்குரிய கடமைப்பணி

***

SLExam.com

SLExam.com